1991 சனவரி 22]

விரும்புகிறேன். தொடர்ந்து பலரும் பயன் பெறுகின்ற வகையில் மிகுந்த எளிய அணுகுமுறையில், எந்தவித சங்கடமும் இல்லாமல் செய்யப்பட்டு, இந்த இலக்கை நாங்கள் எட்டியிருக்கிறோம் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த அறிவிப்புக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இன்றைய தினம் பெட்ரோல்-டீசல் தட்டுப்பாடு இருக்கின்ற நிலைமையில், சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு மோட்டார் பொருத்துவதன் மூலம் அதிகமான பெட்ரோல் பற்றாக்குறை ஏற்படலாம். இந்த நிலையில் டீசல், பெட்ரோல் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடு இல்லாமல் அவர்களுக்குக் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ? அல்லது அவர்களுக்கு பெட்ரோல் மானியம் வழங்கி, அந்த ரிக்ஷா ஓட்டுகின்ற தொழிலாளர்களை வாழ வைக்கும் முறையிலாவது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நடவடிக்கைகளை மத்திய அரசுதான் எடுக்க வேண்டும்.

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆட்டோ, கார் போன்ற வாகனங்களுக்கு உள்ளதைப் போல மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷாக்களுக்கும் அவற்றை ஓட்டுபவர்கள் சாலை விதிகளைப் பின்பற்றும் வண்ணம் ஓட்டுநர் லைசென்ஸ் பெற அறிவுறுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

9-50 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இது இத்தகைய சைக்கிள் ரிக்ஷாக்களைப் பெறுபவர்களுக்கு உதவியளிப்பதைப் பற்றிய கேள்வியாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அது குறித்து தனியாக ஒரு வினாவை எழுப்பினால் விடையளிக்க இயலும்.

மகாபலிபுரம் செல்ல ஹெலிகாப்டர் சர்வீஸ்

*8145—டாக்டர் து. திருமூர்த்தி :

திரு.எஸ்.டி. உகம்சந்த் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு சுற்றுலாக் கழகம் சென்னை விமான நிலையத்திலிருந்து மகாபலிபுரம் செல்ல ஹெலிகாப்டர் சர்வீஸ் இயக்க முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு சுற்றுலாவை வளர்க்க வேண்டுமென்ற முறையில் அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மகாபலிபுரம் உலக அளவில் பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தலமாக விளங்கி வருவதால் சுற்றுலாப் பயணிகளை நாம் கவர்வதற்காக அரசின் மூலமாகவோ அல்லது தனியார் மூலமாகவோ இதுபோன்ற வசதிகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்தால் சுற்றுலா மேலும் வளர்வதற்கு வாய்ப்பு இருக்குமென்ற காரணத்தால், அரசாங்கம் அப்படி ஏதாவது நடவடிக்கையெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக இப்படிப்பட்ட விமானம், ஹெலிகாப்டர் போன்றவைகளை ஓட்டுவதற்கு இயலாது. அப்படிப்பட்ட திட்டம் சுற்றுலா வளர்ச்சி கழகத்திலே இல்லை. ஆனால் இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல சென்னையிலிருந்து பம்பாய்வரையில் தனியாருடைய விமானம் ஓடத் தொடங்கியுள்ளது. அதைப் போல எதிர்காலத்திலே மகாபலிபுரம், காஞ்சிபுரம் போன்ற இடங்களுக்கு ஹெலிகாப்டர் விமான சர்வீஸ் நடத்துவதற்கும் அப்படிப்பட்ட தனியார்கள் முன்வருவார்கள் என்றே நான் எதிர்பார்க்கிறேன்.

மருதமலை கோவிலைப் புதுப்பித்தல்.

*9960-திரு. யூ.கே.வெள்ளிங்கிரி :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) தொண்டாமுத்தூர் தொகுதியில் அமைந்துள்ள மருதமலை கோவிலைப் புதுப்பிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?